விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 282 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 11 சனிக்கிழமை (27.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### தமிழர் தாயகத்திலும் புலத்திலும்
# உணர்வுபூர்வமாக இடம்பெற்ற
# திலீபனின் நினைவேந்தல்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

(04ஆம் பக்கம் பார்க்க)



### யாழ்.போதனாவில்
## இரட்டை சிசுக்களை பிரசவித்த தாயும் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா

15ஆம் பக்கம் பார்க்க

## திலீபனின் நினைவேந்தலில் சர்ச்சைக்குரிய துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் தியாக தீபம் திலீ

15ஆம் பக்கம் பார்க்க

## தடுப்பூசி ஏற்றப்பட்ட 4 மாத குழந்தை மரணம்
### உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் உடற்சோர்வு அடைந்த நான்கு மாத பெண்

04ஆம் பக்கம் பார்க்க

## யாழில் நீரில் மூழ்கிய இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் நீரில் மூழ்கிய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஆனைக்கோட்டை

15ஆம் பக்கம் பார்க்க

### - ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் -
# முன்னாள் இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படுவார்கள்
### அமெரிக்காவில் ஜனாதிபதி அநுர

(நியூயோர்க்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக எதிர்காலத்தில் ஒன்று அல்லது இரண்டு முன்னாள் இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படுவார்கள் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்களுக்காக வராத கண்ணீர் காசா மக்களுக்காக வருகிறதா?
### அநுரவின் உரை தொடர்பில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கிளிநொச்சி)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, யுத்த காலத்தில் நமது தமிழ்ச் சகோதர உறவுகளுக்காக சிந்தாத கண்ணீரைத் தற்பொழுது காசாவில் இடம்பெறுகின்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காகச் சிந்துகிறார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

15ஆம் பக்கம் பார்க்க

## கடை உடைத்து ரூபாய் 27 இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு
### திருநெல்வேலியில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)


திருநெல்வேலியில் வர்த்தக நிலையம் ஒன்றினை உடைத்து அதிலிருந்த 27 இலட்சம்ரூபாய்பெறுமதியான பொருட்களைத் திருடிய நால்வர் நேற்று கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 19, 27,30 மற்றும் 32 வயதுடைய சந்தேகநபர்களாவர்.

குறித்த வர்த்தக நிலையமானது

04ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரைக் காணி கையகப்படுத்தப்படவில்லை



### புத்த சாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி

(கொழும்பு)

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்திருக்கும் காணியைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜப்பான் பயணமானார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

அமெரிக்க விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி ஜப்பானுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின்

15ஆம் பக்கம் பார்க்க

### காங்கேசன்துறை துறைமுகத்தை
## சர்வதேச துறைமுகமாக மாற்றியமைக்க முடியாது
### சபையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்தைச் சர்வதேச துறைமுகமாக மாற்றியமைக்க முடியாது எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

04ஆம் பக்கம் பார்க்க

### நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

卐

ஓம் நமசிவாய

## சிவானந்த குருகுலம், வேதசிவகாமப் பாடசாலை, திருக்கேதீஸ்வர ஆலயம், திருக்கேதீஸ்வரம் விண்ணப்பங்கள் கோருதல்

சிவானந்த குருகுல வேதசிவாகமப் பாடசாலையில் அந்தணர் குல மாணவர்களுக்கான குருகுலக்கல்வி வழங்கப்படும். இதற்கான பாடத்திட்டங்கள் மற்றும் செயன்முறைப் பயிற்சிகள் தமிழ்நாடு தருமபுர ஆதீனத்தால் வடிவமைக்கப்பட்டு வேத சிவாகமப் பண்டிதரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இக்கல்வித்திட்டம் ஐந்தாண்டுகள் விரிவுரைகள். செயன்முறைகள், உள்ளகப் பயிற்சி என்பன தருமபுர ஆதீனம், தமிழ்நாடு, இந்தியாவினால் வழங்கப்படும்.

- சிவானந்த குருகுல வேதசிவாகம பாடசாலையால் வழங்கப்படும் பயிற்சி நெறிகள் ஐந்தாண்டுகளுக்கு முற்றிலும் இலவசமானது.
- உணவு, மருத்துவம், தங்குமிடம் மற்றும் நலச்சேவை வசதிகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- வழமையான பாடசாலைக் கல்வியை கற்கும் மாணவர்களுக்கும் அவர்களின் கல்வியைத் தொடர வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
- வேத சிவாகக் கல்விக்கு மேலதிகமாக ஆங்கிலம், கணினி, சாஸ்திரக் கல்வி என்பன வழங்கப்படும். ஏற்கனவே திருக்கேதீச்சர ஆலயச்சூழலில் நடைபெற்று எதிர்பாராதவிதமாக கைவிடப்பட்ட குருகுலக்கல்வியைக் கற்ற மாணவர்களும் சிவானந்த குருகுல வேதசிவாகமப் பாடசாலையில் இணைந்து தமது கல்வியைத் தொடர்ந்து கற்க முடியும். இவர்களுக்கான வேதசிவாகமக் கல்வி விடுபட்ட காலத்திலிருந்து தொடர ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சிவானந்த குருகுலக்கட்டமைப்பு மிகவும் இறுக்கமான நடைமுறைகளைக் கொண்டதும், தொடர்ந்து இக்கல்வியை வழங்கக்கூடிய கட்டமைப்பினைக் கொண்டதும் ஆகும். ஆகவே இக்கல்வியைப் பெற அனைத்து பிராமண குல மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பங்கள் யாவும் தங்கள் சுயவிபரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டு 19.10.2025 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னராக **தலைவர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை, திருக்கேதீச்சரம்.** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ தங்கள் விண்ணப்பங்களை கையளிக்க முடியும்.

**நேர்காணல் திகதி : 16.11.2025**
**நேரம் : 2.00 Pm - 5.00 Pm**
**இடம் : சிவனருள் இல்லம், திருக்கேதீஸ்வரம்.**

**தொடர்பு இலக்கங்கள்**
**0718 671 113** (WhatsApp)
**00447969488968** (WhatsApp)
**076 655 6258**

**இவ்வண்ணம்**
திருக்கேதீச்சர ஆலய
நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
தருமபுரம் ஆதீனம், தமிழ்நாடு, இந்தியா
அமரர். நமசிவாயம் குடும்ப நம்பிக்கை நிதியம்

(1590)



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாயப் பண்ணை ஒன்றில் தங்கி நின்று வேலை செய்ய கூலி ஆட்கள் தேவை. விவசாயம், தோட்ட வேலைகளில் அனுபவமுள்ள ஆண்/பெண் கூலியாட்கள் தேவை.

**வயது : 25 – 60**

**076 287 8157**

(1594)


## கொடிகாமத்தில் கருங்குளவி கொட்டியதில் பெண் மரணம்

கொடிகாமத்தில்கருங்குளவி கொட்டுக்கு இலக்கான பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் கொடிகாமவீதி, புலோலி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அன்னபூரணம் (வயது-83) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை(25) காலை 9.30 மணியளவில் பனையால் விழுந்த கூட்டில் இருந்து கலைந்த குளவிகள் பல அவரைக் கொட்டிய நிலையில் உடனடியாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை (26) கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.(60)



## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம்
கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் வயிற்றுப்புண் | Gastritis அல்சர் | மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்

**நல்லூர், யாழ்ப்பாணம்.**
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**

(5525)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 26.04.1944
மறைவு 25.09.2025

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியை
**கைலாசபதி கீதா** அவர்களின்
அன்புத் தந்தை

### அமரர் சதாசிவம் கைலாசபதி

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர் கழகம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

(C-3964)

## மரண அறிவித்தல்



மலர்வு 20.09.1949
உதிர்வு 23.09.2025

### திருமதி சண்முகலிங்கம் சந்திராதேவி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் சந்திராதேவி அவர்கள் கடந்த 2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லில்லிமலர் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும் பிரசாந்த், துஷித்தா, ரஜீவ்சாந்த் ஆகியோரின் அருமைத் தாயாரும், சுமித்திரா, கோகுலன், சத்தியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திவ்யேஷ், ரிஷிகேஷ் ஆகி யோரின் அன்பு அம்மம்மாவும் யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விஜயலக்சுமி, விசாகரட்ணம், சுதாகரன், ரமணி, மோகன், சுந்தரலிங்கம், சிவனேசலிங்கம், தேவசேனா, காலஞ்சென்ற இந்திரசேனா மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம், பதுமசேனா ஆகியோரின் அன்பு மைத்துனியும் மண்டலநாயகி, பாமதி, காலஞ் சென்றவர்களான உருத்திராங்கதன், கனகநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி, அருள்நேசன் ஆகியோரின் பாசமிகு சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 2025 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(5517)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகமெங்கும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு





















**தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று வடக்கு கிழக்கின் பல பாகங்களிலும் இடம் பெற்றது.**

**தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு, நேற்று தமிழர் தாயகம் எங்கும் அனுஸ்டிக்கப்பட்டது. தியாக தீபம் திலீபன் ஆகுதியான நேரமான காலை 10.48 மணிக்குச் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.**




(படங்கள்:-சிவசாந்தன், கஜிந்தன், தேவானந்தன், வசந்தரூபன், சதீஸ், ஜோசப்நயன், மகாலிங்கம்)

# போக்குவரத்து விதிமுறைகளை மீறினால் கடும் சட்ட நடவடிக்கை!

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

**போக்குவரத்து சட்ட விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், நாட்டில் 9,000 போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு அனைத்து போக்குவரத்து விதி மீறல்களையும் கடுமையாக கையாளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேகமாக, பொறுப்பற்ற மற்றும் ஆபத்தான வகையில் வாகனங்களை செலுத்துதல் போன்றவற்றை கண்காணித்தல் மற்றும் வாகனங்கள் உரிய முறையில் பயன்படுத்தபடுகின்றனவா? என்பதை அறிய விசேட குழுக்கள் தினமும் பணியில் ஈடுபடுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அண்மைய காலங்களில் போக்குவரத்து தொடர்பான விதிமீறல்கள் அதிகரித்துள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்துதல், அதிக வேகம் உள்ளிட்ட காரணங்களினாலேயே, அதிகளவான விபத்துக்கள் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், ஆண்டுக்கு சராசரியாக 38,000 வீதி விபத்துக்கள் பதிவாவதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

இந்த விபத்துக்களில், சுமார் 3,000 பேர் உயிரிழப்பதுடன், 8,000 பேர் காயமடைவதாகவும் உலக வங்கியின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# வாகன இலக்கத் தகடு பிரச்சினைக்கு நவம்பர் 15 இற்குள் தீர்வு

(கொழும்பு)

புதிய வாகன இலக்கத் தகடுகளை வெளியிடுவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருவதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

புதிய இலக்கத் தகடுகள் 2025 நவம்பர் 15 ஆம் திகதிக்குள் வழங்கப்படும் என்று அமைச்சர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அடுத்த வாரத்திற்குள் ஒரு தற்காலிக தீர்வை அறிமுகப்படுத்துவோம் என்று நம்புகிறோம் என அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

இப்போது, வாகன இலக்கத் தகடுகள் இல்லாமல் இயங்கும் வாகனங்கள் இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் புதிய எண் தகடுகளை வழங்குவது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம். (நி)

# பதிவாளர் சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் III வகுப்பு II தரம் தகைமையில் உள்ள பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, டிசம்பர் மாதம் நடைபெறும்.

அதற்கான விண்ணப்பப் படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தில் www.doenets.lk இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது நிகழ்நிலை முறையிலேயே ஆகும்.


விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025, ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி ஆகும். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் பதற்றம்

# மக்களின் எதிர்ப்பை மீறி காற்றாலைக்கான பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன

## கலகம் அடக்கும் பொலிஸார் குவிப்பு



மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி நேற்று இரவு நூற்றுக்கணக்கான கலகம் அடக்கும் பொலிஸாரின் பாதுகாப்புடன் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்கள் பாரிய வாகனங்களில் மன்னார் நகரை நோக்கி கொண்டுவரப்பட்டன.

இந்த நிலையில் ஒன்று கூடிய பல நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து மன்னார் நுழைவுப் பகுதியில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதனால் மன்னார் நகரப் பகுதியில் நேற்று நள்ளிரவு வரை பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

(இச் செய்தி அச்சுக்கு போகும் வரையான தகவல்)

(ம-7,285)

## உணர்வு...

தியாகி திலீபனின் நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வாக, நேற்றைய தினம் திலீபன் பிறந்த இடத்திலிருந்து இரு நினைவு ஊர்திகள் யாழ். பலாலி வீதியூடாக நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவிடத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது.

அதேவேளை அவ்வழித்தடத்தில் யாழ். உரும்பிராயில் உள்ள விடுதலைப் போராட்டத்திற்காக தன் உயிரைத் தியாகம் செய்த பொன். சிவகுமாரின் திருவுருவச் சிலைக்கும் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் யாழ். நல்லூர் நோக்கிப் பயணிக்கும் இரு ஊர்திகளுக்கும் மக்கள் வீதியோரங்களில் நின்று அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அந்த ஊர்திகள் இரண்டும் தியாகி திலீபனின் நினைவிடத்தை அடைந்ததையடுத்து, அங்கு குழுமியிருந்த மக்கள் அஞ்சலி செலுத்தினர். இதேவேளை தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு தூக்குக் காவடியும் எடுத்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

திலீபனின் நினைவிடத்தில் அவரது உயிர் பிரிந்த 10.48 மணிக்கு மாவீரர் ஒருவரின் தாயார் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு கலந்துகொண்டிருந்த பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்வுகளில் அரசியல் கட்சி பிரதிநிதிகள், மாநகர சபை, பிரதேச சபை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும் நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவணக் கண்காட்சிக் கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இதேவேளை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் தியாகி திலீபனின் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (ம-7,33)

## சர்வதேச...

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (26) நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு 2017.05.02 ஆம் திகதியன்று அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய துறைமுக அதிகார சபைக்கு பொறுப்பாக்கப்பட்டது. இதற்கமைய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இந்தியாவின் EXIM வங்கி ஊடாக முன்னெடுக்கப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆலோசனை சேவை ஒப்பந்தத்துக்கு அமைய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இயலுமான வகையில் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் நிதி ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை.

காங்கேசன்துறை துறைமுகத்தை அண்மித்த கடற்பகுதி 10 மீற்றர்- 12 மீற்றர் வரை ஆழப் பரப்பைக் கொண்டுள்ளதுடன் அந்த ஆழத்தை மேலும் அதிகரிப்பதற்கு அதிக நிதியை செலவிட வேண்டும். இந்த துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றை கவனத்திற்கொள்ளும் போது காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாக அமையாது. இருப்பினும் அடிப்படை மட்டத்திலான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார். (ம-7)

## முன்னாள்...

அமெரிக்காவிற்கான ஜனாதிபதியின் விஜயத்தின் போது அங்கு வசிக்கும் இலங்கை சமூகத்தினருடன் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த அறிவிப்பினை ஜனாதிபதி வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிப்பதில் தொடர்ச்சியான விசாரணைகள் கவனம் செலுத்துகின்றன.

அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற விசாரணை அறிக்கைகள் முழுமையற்றதாகவும், தவறான தரவுகளுடன் இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி உண்மையைக் கண்டறிய துரித விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என உறுதியளித்தார்.

மேலும் தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதற்கு அரசியல் ஒரு முக்கிய காரணம். ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் ஆட்சிக்கு வந்தனர்.

தாக்குதல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களும் உயர் பதவிகளை வகித்தது கண்டறியப்பட்டது. அப்படியானால் அவர்களின் செயல்கள் எப்படி இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? என்று ஜனாதிபதி அநுர கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் சாட்சியங்கள் அழிக்கப்பட்டு மறைக்கப்படுவதும் விசாரணை தவறாக வழிநடத்தப்படுவதும் நடந்த பிற சம்பவங்களில் அடங்கும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இதுபோன்ற சூழ்நிலையில் எங்களுக்கு விசாரணை கிடைத்துள்ளது. இது நேற்று நடந்த சம்பவம் அல்ல, இன்று விசாரணை தொடங்கப்பட்டது. இது ஒரு கடினமான பணி. ஆனால் சி.ஐ.டி திறமையானது என்று நான் நம்புகிறேன்.

பல சி.ஐ.டி அதிகாரிகள் சமீபத்தில் கைது செய்யப்பட்டனர். பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர். எனவே விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என ஜனாதிபதி அநுர மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தடுப்பூசி...

குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இதில் உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த சஜித்தீபன் கிசாரா என்ற குழந்தையே உயிரிழந்ததாகும்.

கடந்த புதன்கிழமை (24) நான்காம் மாதத் தடுப்பூசி ஏற்றியதன் பின்னர் குழந்தை உடற்சோர்வு அடைந்ததால் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளது.

உடல் நிலை சீரடையாமையால் நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை 1.15 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது சிறிது நேரத்தில் குழந்தை உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

இறப்புக்கான காரணம் கண்டறிய உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்விற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## கடை உடைத்து...

நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு 27 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. இந்நிலையில் வர்த்தக நிலைய உரிமையாளர் இது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

அந்தவகையில் விரைந்து நடவடிக்கை எடுத்த. கோப்பாய் பொலிஸார் நேற்று குறித்த சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்ததுடன் களவாடிய பொருட்களையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஏற்றுக் கொள்ளாத

## காற்றாலை திட்டத்தை நிறுத்துங்கள்!

### ரவிகரன் எம்.பி சபையில் வலியுறுத்து

(மன்னார்)

**மன்னார் மக்கள் ஏற்றுக்கொள்ளாத காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தினை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் . வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று சபை அமர்வில் கலந்து கொண்டு உரையாற் றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித் துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கை யில்,

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தினை நிறுத்து மாறு இந்த உயரியசபையைக் கோருகின்றேன்.

மன்னார்த்தீவில் மின்உற் பத்திக் கோபுரங்கள் அமைப் பதை நிறுத்தக்கோரி மன்னார் மக்கள் இன்றுடன் 55ஆவது நாளாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில் மக்களின் எதிர்ப்பி னால் இடை நிறுத்திவைக் கப்பட்டிருந்த காற் றாலை மின் உற்பத்தி திட்டத் தினை அர சாங்கம் மக்களின் விருப்பத் திற்குமாறாக மீள முன்னெ டுக்கும் செயற்பாட்டில் ஈடுபட் டுள்ளதாக அறியமுடிகின்றது.

மன்னார் மக்கள் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்திற்கு எதி ரானவர்களில்லை. அவர்கள் மன்னார்தீவினுள் மக்கள் குடி யிருப்புப் பகுதிகளுக்குள் காற் றாலை மின் உற்பத்திக் கோபு ரங்கள் அமைப்பதையே எதிர்க் கின்றனர்.

குறிப்பாக 32கிலோமீற்றர் நீளமும், 4கிலோமீற்றர் வரை யான அகலமுடைய குறைந் தளவு நிலப்பரப்பினைக் கொண்ட மன்னார்தீவில் ஏற்கனவே 30 காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள் ளன.

இந்நிலையில் மேலதிகமாக காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டால் மன்னார்த்தீவினுள் மக்கள் வாழ முடியாதநிலை ஏற்படும் என்பது அந்த மக்களின் கருத் தாகவுள் ளது.

இது தவிர வங்காலை, நறுவி லிக்குளம் ஆகியஇடங் களில் 6 காற்றாலை மின் உற் பத்திக் கோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளதுடன், மன்னார் மாவ ட்டத்தில் மொத்தமாக 36 காற் றாலை மின் உற்பத்திக் கோபு ரங்கள் ஏற்கனவே அமைக்கப்பட் டுள்ளன. எனவே நாட்டின் பொருளாதாரத்திற்கும், நாட்டின் மின்சாரத் தேவைக்கும், மீள் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான இலக்கினை அடைவதற்கும் ஏற்கனவே பங்களிப்பினை நல்கியுள்ளதாக அந்த மக்கள் கருதுகின்றனர். இத்தகைய காரணங்களுக்காகவே மன் னார்த்தீவினுள் காற்றாலைத் திட்டத்தினை அமுல்படுத்து வதற்கு மக்கள் எதிர்க்கின்ற னர். மேலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மன்னார் மாவட்ட மக்களை எதிர்த்துக் கொண்டு இந்த காற்றாலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டா மெனவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட் டுக்கொள்கின்றேன் எனத் தெரி வித்தார். (நி)


**TRAVEL EXECUTIVE**

**யாழ்ப்பாணம்**

நீங்களும் சுற்றுலாத்துறையில் தொழில்புரிய ஆர்வமுள்ளவரா?
புதிதாக தனது கிளையை யாழ்ப்பாணத்தில் விஸ்தரிக்கவுள்ள நிறுவனத்திற்கு கீழ்கண்ட திறமையுள்ளவர்கள் பெண்கள் விண்ணப்பிக்கலாம்

- Travel & Tourism படித்தவர்கள்
- கணினி அறிவு
- Customer Service
- Fluent in English
- முன்னனுபவம் மேலதிக தகமையாகும்.
- Should be able to manage the office works.



E-mail: iwingstours@gmail.com
WhatsApp: 077 8620623
(C -291)



**மணிவிழா வாழ்த்து**

சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் உப தலைவரும்
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின்
ஓய்வுபெற்ற உப அதிபருமாகிய
திருமதி. **மோகனவதனி ரவீந்திரன்**
(BA,PGDE,PGDSNE, SLTS - I)



செங்கதிரோன் சுடர்
கீழ்த்திசை எழுவது போல்
சந்திரனில் சூரிய இரவி
கதிர் பரப்புதல் போல்
வதனியால் ரவியும் ரவியால் வதனியும்
எங்கும் வாழ்வக புகழ் பரப்பிட
வாழ்வக தலைமகளே
வாழிய வாழிய பல்லாண்டு வாழியவே.

வாழ்த்துவோர் :-
வாழ்வக சமூகம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம்
27.09.2025
(1585)



**சமையல் வேலைக்கு ஆள் தேவை**

கம்பர்மலை வல்வெட்டித்துறையில் உள்ள உற்பத்தி நிலையத்திற்கு ரோல், வாய்ப்பண், வடை, ரொட்டி ஏனைய பலகாரங்கள் போடத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும், பழகக் கூடியவர் உடன் தேவை (ஆண், பெண் இருபாலாரும்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும், தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**தொலைபேசி இலக்கங்கள்**

**0773785687, 0762705442**

**உடனடியாக தொடர்பு கொள்ளவும்.**

(C -3963)

**பரந்தாமன் தேநீர் கடை,**
**பேக்கரி தொழிற்சாலை, கம்பர்மலை.**


# இராசிபலன்

27.09.2025
புரட்டாதி 11 , சனிக்கிழமை
பஞ்சமி முற்பகல் 9.57 மணிவரை
அனுசம் முன்னிரவு 11.55 மணிவரை

சுப நேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சஷ்டி விரதம்

சந்திராஷ்டமம்
பரணி,அச்சுவினி

**வளவன்**


மேஷம்
ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.


கடகம்
பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும், தாழ்ந்த சுபாவமுண்டு.


துலாம்
உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்,பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மகரம்
திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறும் வாய்புண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் குடும்பத்தில் மகிழச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், ஆடம்பர பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,போஜன சுகமுண்டு.


சிம்மம்
தொலைபேசி வழியாக கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள். வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


விருச்சிகம்
விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும். குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு கற்பனை மிகுதியான நாள்.


கும்பம்
நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும். இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்
வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும்.


கன்னி
கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள். உறவினர்கள் பக்கபலமாக இருப்பதால் நீண்ட நாளைய பிணக்குகளில் திசைத்திருப்பங்கள் ஏற்படலாம்.


தனுசு
வழிபாட்டில் சிறப்பினைக் காண வேண்டிய நாள். ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன இடம் பெறலாம். பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்


மீனம்
உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். சுணங்கிய காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

**தெய்வங்களுக்கு மிகவும் அன்பானவர்கள் இளமையிலேயே இறக்கிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு
# விழிப்புணர்வு நடைபவனி



(கரணவாய்)

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் உளநல சிகிச்சை பிரிவினரினால் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான குறித்த நடைபவனி பிரதான வீதி ஊடாக மந்திகைச் சிலையடிச் சந்திக்கு சென்று அங்கிருந்து சாவகச்சேரி வீதி ஊடாக வைத்தியசாலையைச் சென்றடைந்தது.

"உள நிறைவான குடும்பமே ஆரோக்கியமான நாட்டின் அத்திவாரம்" எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இவ் விழிப்புணர்வு நடைபவனியில் வைத்தியர்கள், பாடசாலை மாணவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பிரதேச சபை மற்றும் நகரசபையினர் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நடை பவனிக்கான பாதுகாப்பினை பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். (8-60)


# திரையிடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் மாதாந்தத் திரையிடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு, 18/2, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் நடைபெறவுள்ளது.

புகழ்பெற்ற மலையாளத் திரைப்பட நெறியாளரான அடூர் கோபாலகிருஷ்ணனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட, 'கதாபுருஷன்' என்ற திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

இத் திரைப்படமானது 1996 ஆம் ஆண்டில் சிறந்த திரைப்படத்துக்கான இந்தியத் தேசிய விருதைப் பெற்றுள்ளது. அத்துடன் ஆங்கிலத் துணைத்தலைப்புகளைக் கொண்ட இத்திரைப்படம் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (3)



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிதி) என்.எஸ்.ஆர்.சிவரூபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொண்டார்.

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுபட, தூக்கம் சம்பந்தபட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப்படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் என்.ஜெயகிருஷ்ணன் வழங்குவார்.

தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (8)

# இரத்ததான முகாம்

(அராலி)

கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை கருகம்பனை கலாசார மண்டபத்தில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது. (3-104)

# வீட்டின் மேல் முறிந்து விழுந்த மரம்




(அராலி)

யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய பலத்த காற்று காரணமாக பனை மரம் ஒன்று வீட்டுக்கு மேல் முறிந்து விழுந்துள்ளது.

இந்த அனர்த்தத்தினால் குறித்த வீடானது பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விடயத்தினை யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

குப்பிளான் பகுதியிலுள்ள J/211 கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றுள்ள இந்த அனர்த்தத்தினால் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரும் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (8-104-33)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபை அறநெறி மாணவர்களின் நவராத்திரி விழாவின் கலை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்களை நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# பரிசில் தின நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலய பரிசில் தின நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் அ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக ஜே/262 கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் சு.சண்முகவடிவேல் மற்றும் குருநகர் பிரதேச வைத்திய சாலையின் மருந்துக் கலவையாளரும் பழைய மாணவனுமாகிய சி.சிவகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

# தியாக தீபம் திலீபனுக்கு
## பருத்தித்துறையில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)



தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகள் பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவு தூபி முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நினைவு தூபி முன்பாக காலை 8 மணிக்கு அடையாள உண்ணாவிரத போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தியாகதீபத்தின் உயிர் பிரிந்த காலை 10.48 மணிக்கு ஈகைசுடர் ஏற்றப்பட்டு, திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 150 | 200 |
| தக்காளி | 200 | 160 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 250 | 200 |
| கோவா | 250 | 200 | 250 | 200 |
| கரட் | 200 | 250 | 350 | 250 |
| பூசணி | 60 | 50 | 50 | 50 |
| புடோல் | 100 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 600 | 500 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 300 | 150 | 250 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 350 | 400 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 400 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 180 |
| கீரை - 1 பிடி | 150 | 60-160 | 150 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1000 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 700 | 1000 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 160 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகதீபம் திலீபன் நினைவாக உண்ணாவிரதப் போராட்டம்



(வவுனியா)

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை முன்றலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில் அமைக்கப்பட்ட தியாகதீபம் திலீபனின் நினைவுத் திடலில் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஐந்தம்ச கோரிக்கையை முன்வைத்து தியாகதீபம் திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்து 38 ஆண்டுகள் கடந்த நிலையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்தூபி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அடையாள உண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)

## முதிரை குற்றிகளுடன் விபத்துக்குள்ளான வாகனம்

(வவுனியா)

வவுனியா, புதுக்குளம் பகுதிக்கு அருகாமையில் முதிரைக் குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளான நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, இரணை இலுப்பங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த போது அங்கு கடமையில் இருந்த பொலிஸாரால் குறித்த வாகனம் வழி மறிக்கப்பட்டுள்ளது. எனினும் அது நிறுத்தாமல் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் புதுக்குளத்திற்கு அண்மித்த பகுதியில் விபத்திற்குள்ளான நிலையில் பொலிஸாரால் அவ் வாகனம் மீட்கப்பட்டது. வாகனத்தில் இருந்த 11 முதிரைக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். வாகனத்தின் சாரதி மாயமாகியுள்ள நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8-250)

## சிறுவர்களைப் பாதுகாப்போம் விழிப்புணர்வு வீதி நாடகம்

(மன்னார்)



சிறுவர்களை பாதுகாக்கும் நோக்கோடு சீயோன் திருச்சபையின் போவாஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று முன்தினம் மாலை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் மற்றும் ஆண்டாங்குள பிரதேசத்தில் இடம் பெற்றது.

சிறுவர்களை பாதுகாப்பது ஒவ்வொரு தனிநபர்களினதும், சமூகத்தினதும், அரசினதும் கடமையாகும் என்பதை கருத்தில் கொண்டு குறித்த விழிப் புணர்வு வீதி நாடகம் இடம் பெற்றது.

இதன் போது போவாஸ் நிலையத்தின் பங்காளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து வீதி நாடகத்தை நடத்தி இருந்தது குறிப்பிடத் தக்கது. (8-285)




## புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவி தொழிற்சாலை முகாமையாளர்.**
சம்பளக் குறியீடு (110/10)
சம்பள அளவுத்திட்டம் :-34745-610X10-670X10-830X10-55845
சுற்றுநிருபம்: 02/2025 (1)

**02.பதவி களஞ்சியப் பொறுப்பாளர்**
சம்பளக் குறியீடு (202/09)
சம்பள அளவுத்திட்டம்:-35200-640X10-700X10-860X10-57200
சுற்றுநிருபம்: 02/2025 (1)

**03.பதவி கிளை மேற்பார்வையாளர்**
சம்பளக் குறியீடு (207/10)
சம்பள அளவுத்திட்டம் :-34745-610X10-670X10-830X10-55845
சுற்றுநிருபம்- 02/2025 (1)

**04.பதவி:- எழுதுநர்**
சம்பளக் குறியீடு (302/12)
சம்பள அளவுத்திட்டம் :-33820-550X10-610X10-770X10-53120
சுற்றுநிருபம் - 02/2025 (1)

**05.பதவி :- விற்பனை உதவியாளர்**
சம்பளக் குறியீடு (308/15)
சம்பளஅளவுத்திட்டம் :-32435-460X10-520X10-680X10-49035
சுற்றுநிருபம் 02/2025 (1)

**06.பதவி :-தொழிலாளி**
சம்பளக் குறியீடு (318/17)
சம்பளஅளவுத்திட்டம் :-31515-360X10-450X10-500X10-45615
சுற்றுநிருபம்: 02/2025 (1)

**07.பதவி :- உற்பத்தி உதவியாளார்**
சம்பளக் குறியீடு (326/16)
சம்பளஅளவுத்திட்டம் :-31975-390X10-490X10-650X10-47275
சுற்றுநிருபம்- 02/2025 (1)

➢ **வயதெல்லையானது 18-45 வயதாகும்.**

**பொதுவானது:** கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய மாதாந்த இலாபத்தில் வாழ்க்கை செலவுப்படி -7800.00 செயலாற்று கொடுப்பனவு - 1000.00 ரூபா பெற்றுக்கொள்ள முடியும்.வயது எல்லை 18-45இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயது எல்லை இல்லை சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும் விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்புதல்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் http://np.gov.lk/cocoperative-employees-commission-circular-2021 என்ற இணையத் தளத்தில் பார்வையிட்டுக்கொள்ள முடியும் அல்லது அலுவலகத்திற்கு சமூகம் தந்து தகைமைகளைப் பார்வையிட்டு விண்ணப்ப படிவத்தினை பெற்று முழுமையாக பூரணப்படுத்தி படிவத்துடன் பிறப்பு சான்றிதழ் கல்வித் தகைமை சான்றிதழ். அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ். தொழில் தகைமைச்சான்றிதழ். ஏனைய தகைமை இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15.10.2025ஆம் திகதிக்கு முன்னதாக **“தலைவர் புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிருத்திக் கூட்டுறவுச் சங்கம் புதுக்குடியிருப்பு குழந்தையேசு கோவில் வீதி”** என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடிய வாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடல் வேண்டும்

➢ மேலதிக தொடர்புகளுக்கு 0212061696.
➢ பொதுமுகாமையாளர் 0776333144.

**தலைவர்.**
**புதுக்குடியிருப்பு பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**புதுக்குடியிருப்பு.**


(C-3962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஏமனில் குண்டுமழை பொழிந்த இஸ்ரேல்!

### 8 பேர் உயிரிழப்பு



(சனா)

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ட்ரோன் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் விமானப்படை ஏமன் தலைநகர் சனாவில் அதிரடி குண்டு வீச்சு நடத்தியதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு ஏமனில் செயற்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இதன் பகுதியாக, அரபிக் கடல் மற்றும் செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதோடு, இஸ்ரேலுக்கு எதிராக ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சமீபத்தில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவிய ட்ரோன், இஸ்ரேலின் கடற்கரை நகரமான எலியட்டை தாக்கியது.

இதில் 22 பேர் காயமடைந்தனர் 2 பேர் தீவிர சிகிச்சையில் உள்ளனர். இந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் எச்சரித்தது.

இதனையடுத்து, நேற்று இஸ்ரேல் விமானப்படை ஏமன் தலைநகர் சனாவில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இருப்பிடங்கள், பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் உளவுத்துறை அலுவலகங்களை குறிவைத்து அதிரடித் தாக்குதல் நடத்தியது.

இதில் 8 பேர் உயிரிழந்ததுடன், 140 பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பதவி விலகத்

## உக்ரைன் ஜனாதிப



(கீவ்)......... பதவி விலகத் தயாராக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், ரஷ்யாவுடன் நடக்கும் போர் முடிந்தவுடன் அவர் பதவி விலகத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விடயத்தை ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிந்தால் தேர்தலுக்கு செல்லமாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

காரணம், என் நோக்கம் தேர்தல் அல்ல போரை முடிப்பதே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகால அமைதியை அடைவதற்குத் தேவையான முக்கியமான முடிவுகளை எடுக்க மக்கள், புதிய ஆணையைக் கொண்ட ஒரு தலைவரை விரும்பக்கூடும் என்பதைத்தான் புரிந்து கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இந்தியாவில் பரவும் புதிய வகை வைரஸ்

### மருத்துவர்கள் எச்சரிக்கை

(டில்லி)

இந்தியாவில் புதிய வகை வைரஸ் பரவி வருவதாக ஐ.சி.எம்.ஆர் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக டில்லி, மும்பை, கான்பூரில் H3N2 வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவுவதாகவும், டில்லியில் 11 ஆயிரம் வீடுகளில் எடுக்கப்பட்ட ஆய்வுகளில் 69 சதவீத வீடுகளில் குறைந்தது ஒருவருக்கு இவ்வகை காய்ச்சல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது கொரோனா போல அதிதீவிரமாக இருக்காது என்றபோதிலும், எச்சரிக்கையுடன் இருக்க ஐ.சி.எம்.ஆர் அறிவுறுத்தியுள்ளது. குழந்தைகள், இதய நோய் உள்ளவர்கள், ஆஸ்துமா பாதிப்பு உள்ளவர்கள் கவனமுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "இது ஒரு சுவாச வைரஸ் தொற்று ஆகும். இது 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் 15 வயதுக்குட்பட்டவர்களைப் பாதிக்கிறது. இந்த வைரஸால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைகிறது. மேலும், H3N2 வைரஸ் காய்ச்சல் தொற்றக்கூடியது.

மேலும் பாதிக்கப்பட்ட நபருக்கு அருகில் வசிப்பவர்களுக்கு தொற்று ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது. இது குறிப்பாக இருமல், தும்மல் அல்லது பேசும்போது வெளியாகும் சுவாசத் துளிகள் மூலம் பரவுகிறது. எனினும், இந்த வைரஸ் புதியதல்ல. பழைய வைரஸ்தான். இந்த வைரஸின் ஒரு சிறப்பு வகையே இப்போது பரவி வருகிறது.

வானிலை மாறும்போது இந்த வகை வைரஸ் பரவுகிறது. பொதுவாக, அறிகுறிகள் அதிக காய்ச்சல், சளி, தொண்டை வலி, தலை வலி, தசை, உடல் வலி, சோர்வு, வயிற்று வலி மற்றும் சில நேரங்களில் குமட்டல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்றவையாகும்.

ஆனால் சிலருக்கு சுவாசிப்பதில் சிரமம் மற்றும் அதிக காய்ச்சல் இருக்கும். ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இந்த வைரஸ் தானாகவே குணமடைகிறது. மக்கள் பொதுவாக 3-5 நாட்களில் குணமடைவார்கள்" எனத் தெரிவித்துள்ளனர். (நி)




## ஐரோப்பிய வா

## தவிர்த்த இஸ்

(ஜெருசலேம்)

ஐ.நா சபை கூட்டத்தில் பங்கேற்க சென்ற இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் விமானம், ஐரோப்பிய வான்வெளியை தவிர்த்து, மாற்று வழியில் பயணம் மேற்கொண்டது.

அமெரிக்காவில் 80ஆவது ஐ.நா பொதுச்சபை கூட்டம் நடந்து வருகிறது. கூட்டத்தில் முதலாவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து பல்வேறு நாட்டுத் தலைவர்கள் பங்கேற்று உரையாற்றி வருகின்றனர். அந்தவகையில், ஐ.நா சபை கூட்டத்தில் பங்கேற்க இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விமானத்தில் புறப்பட்டுச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## த் தயார்!

## பதி அதிரடி!

....
க
தி
ர்
தி



## வான்வெளியை
## ஸ்ரேல் பிரதமர்

அவரது விமானம், வழக்கமாக, இஸ்ரேலில் இருந்து கிரீஸ், இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் வான்வெளி வழியாகத்தான் செல்லும். ஆனால் இந்த முறை, ஐ.நா சபைக்கு நெதன்யாகுவின் விமானப் பயணம் வேறு பாதையில் இருந்தது. சிறிது நேரம் மட்டுமே கிரீஸ் மற்றும் இத்தாலி வான்வெளியை கடந்து சென்றது. அங்கிருந்து மத்தியத் தரைக்கடல் மீது பறந்த விமானம், ஜிப்ரால்டர் தடத்தை கடந்து அட்லாண்டிக் கடல் வழியாக அமெரிக்கா சென்று சேர்ந்தது. இதனால் விமானத்தின் பயண நேரம் அதிகரித்தது.

இவ்வாறு ஐரோப்பிய நாடுகளின் வான்வெளியை பயன்படுத்தாமல், கடல் மீது பறந்து அமெரிக்கா சென்றதற்கு முக்கிய காரணம் உள்ளது. பாலஸ்தீனத்தை தனி நாடாக பிரான்ஸ் இந்த வாரத்தில் அங்கீகரித்துள்ளது. ஸ்பெயின் ஏற்கனவே அங்கீகரித்து விட்டது.

ஐரோப்பிய நாடுகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணையை அமுல் செய்வதற்கான ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

காசாவில் நிகழ்த்திய போர்க்குற்றங்களுக்காக, நெதன்யாகு மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணையை பிறப்பித்துள்ளது.

இதனால் விமானம் அவசரமாக தரையிறங்கும் பட்சத்தில், பிடியாணையை அந்த நாடுகள் அமுல் செய்யவும் வாய்ப்புள்ளது.

அதன் காரணமாக, இஸ்ரேல் பிரதமரின் விமானம், கடல் மீது பறந்து அமெரிக்கா சென்றதாக, இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## ‘ரகசா’ புயல் தாக்கத்தின் போது கடற்கரைக்குச் சென்று செல்பி

### இரு பெண்கள் கைது



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கை “ரகசா” புயல் தாக்கியபோது, 5 வயது சிறுவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்படும், இலங்கை மற்றும் இந்திய பெண்களை அந்த நாட்டின் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் தெற்கு மாவட்ட கடற்கரையில், இந்திய மற்றும் இலங்கை நாட்டினர் என அடையாளம் காணப்பட்ட இரண்டு பெண்களுடன் ஒரு சிறுவனும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதன்போது, புயல் எச்சரிக்கையும் நடைமுறையிலிருந்துள்ளது.

எனினும், அதனைப் பொருட்படுத்தாமல், குறித்த இரண்டு பெண்களும், சிறுவனுடன் கடற்கரைக்குச் சென்று செல்பி எடுத்ததாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன்போது, திடீரென ஒரு பெரிய அலை அவர்களை இழுத்துச் சென்றதாகவும், எனினும், எந்தவித பாதிப்பும் இன்றி மூவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கடுமையான வானிலையின்போது கடலோரப் பகுதிகளைத் தவிர்க்குமாறு அதிகாரிகள் பலமுறை பொதுமக்களை எச்சரித்த நிலையில், அதனை புறக்கணித்தமைக்காகவே இந்த இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ‘ரகசா’ புயலால்
### சீனா, தாய்வானில் கடும் சேதம்

(பீஜிங்)

தென் சீனக்கடலில் உருவான “ரகசா” புயல், தாய்வானைப் புரட்டி எடுத்ததைத் தொடர்ந்து சீனாவின் குவாங்டாங் மாகாணத்தைத் தாக்கியதில், பெரும் பொருட்சேதங்களும், மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

புயல் கரையைத் தாக்கியபோது, மணிக்கு 200 முதல் 230 கிலோ மீற்றர் வேகத்தில் கடுமையான காற்று வீசியது.

உச்சபட்சமாக மணிக்கு 265 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியதாகப் பதிவாகியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதோடு, 100 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

புயல் காரணமாக அப்பகுதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் முறிந்து விழுந்துள்ளன.

சேதங்களைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் சுமார் 5 இலட்சம் வீடுகள் இருளில் மூழ்கின.

புயல் மற்றும் அதைத் தொடர்ந்த பலத்த கனமழையால், அங்குள்ள பல நகரங்கள் வெள்ளக் காடாக மாறின.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, அவர்களுக்காகப் பல இடங்களில் தற்காலிக நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் புயல் வியட்நாமை நோக்கி நகர்ந்து செல்வதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக் கண்காணிப்பாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

2025 க.பொ.த உயர்தர நடைமுறைப் பரீட்சைக்கான, பரீட்சை கண்காணிப்பாளர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

விண்ணப்பங்கள் 2025 ஒக் டோபர் 07ஆம் திகதி வரை ஒன்லைனில் ஏற்றுக்கொள் ளப்படும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரப் பூர்வ வலைத்தளமான www. doenets.lk அல்லது https://eservices. exams. gov.lk/ practical வழியாக அனுப் புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வவுனியாவில் இடம்பெற்ற வடமாகாண தொழில் துறை வர்த்தக சந்தை



(வவுனியா)

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை இணைந்து நடத்தும் வடமாகாண தொழில் துறை வர்த்தக சந்தை வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.இ.சரத்சந்திர நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இச்சந்தையில் உள்ளூர் உற்பத்திகள் உட்பட 50இற்கும் மேற்பட்ட விற்பனைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக இன்றைய தினம் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதாக தொழில் துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், வவுனியா மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (8-250)


## இலங்கை இளங்கலைஞர் மன்றம்.
சட்டநாதர் வீதி, நல்லூர்

### நவராத்திரி விழாக்கால சிறப்புக் கலை நிகழ்வுகள்

**இடம்:** இலங்கை இளங்கலைஞர் மன்றம். சட்டநாதர் வீதி, நல்லூர்
**காலம்:** 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** மாலை 3 மணி

நிகழ்ச்சி நிரல்

- **மங்கல விளக்கேற்றல்**
- **இறை வழிபாடு**
- **மிருதங்க இசைச் சங்கமம் இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்**
  நெறியாள்கை - திரு. கனகசபை சிவகுமார்
- **குழு இசை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள்**
  வயலின் - திரு. கேதீஸ்வரன் வேலதீபன்
  மிருதங்கம் - செல்வன். வேணுகாந்தன்
  நெறியாள்கை - திரு. நந்தகுமார் சஞ்சீவன்
- **பல்லிய இசை**
  வயலின் - திருமதி.மாலினி உலகநாதன்.
  திருமதி. நிரஞ்சலா ஸ்ரீரங்கன்
  வீணை - செல்வி. வலம்புரி ராகவன்
  செல்வி. ஜதுர்ஷா முருகதாஸ்
  மிருதங்கம் - திரு. கனகசபை சிவகுமார்
  தபேலா - திரு. ஜெயக்குமார் ராஜ்குமார்
  நெறியாள்கை - திருமதி. உதயந்தி கனகராஜா
- **இசையரங்கு**
  பாட்டு - திருமதி. ஜீவந்தனி லம்போதரன்
  வயலின் - திரு. கேதீஸ்வரன் வேலதீபன்
  மிருதங்கம் - திரு. வரதராஜசர்மா றமணசர்மா
  கெஞ்சிரா - செல்வன். றமணசர்மா லயசர்மா
  முகர்சிங் - செல்வன். றமணசர்மா கானாம்ருதசர்மா

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

இளங்கலைஞர் மன்றம் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சிறந்த ஆசிரியர்களால் இலவசமாக நடாத்துகின்ற புதிய வகுப்புக்கள் விஜயதசமியில் ஆரம்பம்.

நாள் வகுப்புக்கள், 02.10.2025 மாலை 4 மணி.
**இடம்:** இலங்கை இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர்.
**ஆரம்பமாகும் வகுப்புக்கள்:** பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் புல்லாங்குழல் மற்றும் பரதநாட்டியம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**
(C-3965) **இளங்கலைஞர் மன்ற நிர்வாகம்**


## இன்று ஒரு தகவல் 453

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# விலங்குகள் வாழவைக்கும்!

அதோ போகிறாரே அவருக்கு அவ்வளவு சுலபமாக "மாரடைப்பு" வந்துவிடாது சார்!" என்றார் ஒரு நண்பர்.

"ஏன் அப்படி சொல்றீர்கள்" என்று கேட்டேன்.

"அவர் வீட்டிலே புறா, கிளி, பூனையெல்லாம் வளர்க்கிறார் சார்.. அதனாலே அப்படிச் சொல்கிறேன்!" என்றார்.

"என்ன இது. பூனை வளர்க்கிறதுக்கும் மாரடைப்பு வராமல் இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?" என்றேன்.

அதற்கு பிறகு அவர் விபரத்தைச் சொன்னார். அதுதான் இன்றைக்குத் தகவல்.

நியூ சயின்டிஸ்ட் என்று ஒரு விஞ்ஞானப் பத்திரிகை அது என்ன சொல்லுது என்றால்

வீட்டிலே பூனை, நாய், முயல், புறா, கிளி, மீன் இப்படியெல்லாம் வளர்க்கும் செல்லப்பிராணிகள் இதுலாம் மனிதனுடைய ஆயுளை அதிகரிக்குதாம். மாரடைப்பைக் குறைக்குதாம்!

உடலிலே உள்ள பல கோளாறுகளை சரி செய்கிறதாம்! இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோல் அளவைக் குறைக்குதாம். ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் இதெல்லாம் உண்மை என்று சொல்கிறது அந்தப் பத்திரிகை.

மனித வாழ்க்கையில் செல்லப்பிராணிகளின் பங்கு எப்படி என்பதுதான் ஆராய்ச்சியாம். அது இன்னமும் தொடர்ந்து நடந்துகொண்டுத்தான் இருக்காம்.

"மாரடைப்பு " வந்த நோயாளிகள்லே 92 பேரை கேட்டுப் பதிவு செய்து வைத்தார்கள். ஒரு வருடம் எடுத்துக் கொண்டு அவர்களிடம் பல கேள்விகள் எல்லாம் அந்த காலத்திலே 92 பேரிலே 14 பேர் இறந்துவிட்டார்கள்.

உயிரோடு இருந்தவர்களைப் பற்றிய குறிப்புகளை ஆராய்ந்து பார்த்தார்கள். அதிலே பெரும்பாலானவர்கள் செல்லப்பிராணிகள் வளர்க்கின்றவர்களாம்.

இதுக்கு என்ன காரணம்?

தனிமையிலே வாடாம தடுப்பதற்கு செல்லப்பிராணிகள் நாம் தனித்து வாழ்கிறோம் என்கின்ற உணர்வு வராமல் இருந்தாலே, ஆயுள் அதிகரிக்குதாம்.

அவுஸ்திரேலியாவிலேயும் இதுமாதிரி ஒரு ஆராய்ச்சி நடந்திருக்கிறது! 5741 பேரிடம் சோதனை செய்திருக்கார்கள். செல்லப்பிராணிகள் வளர்த்தவர்கள் உடலிலே உள்ள இரத்தத்திலே மற்றவங்களைவிட இரண்டு சதவீதம் கொலஸ்ட்ரால் அளவு குறைவாக் இருந்ததாம்!

இது நான்கு சதவீதம் இருதய நோயைக் குறைக்குமாம் இதுமட்டுமல்ல. டிரைகிளிசரைடு என்று ஒரு கொழுப்பு, இது ஆபத்தானது. இதுவும் இவர்கள் உடலிலே குறைவாக இருந்ததாம். இரத்த அழுத்தமும் சாதாரண நிலையிலே இருந்ததாம்.

செல்லப்பிராணிகளிடம் அப்படி என்ன பெரிய விசேடம்? வேறு ஒன்றுமில்லை. அதுகளைப் பார்க்கும் நம் வெறுப்பு மாறிப் போகிறது. கோபம் மறைந்துவிடுகிறது. களைப்பு போய்விடுகிறது.

மனது லேசாகிறதுனாலே உடம்பும் சுகமாகி விடும் அவ்வளவுதான் மனநோய் உள்ள குழந்தைகளுக்குக்கூட இது ஒரு நல்ல வைத்தியம்.

பூனையிடமும் நாய்குட்டியிடமும் அதுகள் நம்மிடமும் சகஜமாக பேச ஆரம்பித்துவிடும். இதுவும் ஆராய்ச்சி மூலமாக கண்டுபிடித்தார்கள்.

செர்வல் - என்று ஒரு மனித-மிருக நட்பு ஆராய்ச்சியாளர் அவர் ஒரு பெரிய லிஸ்ட்டே கொடுக்கிறார். செல்லப்பிராணிகள் வளர்ப்பதினாலே என்னென்ன சௌகரியங்கள் உண்டு என்று!

சின்னச் சின்ன கவலைகள் மறையுமாம்.

இடுப்பு வலி, தலைவலி, கால் வலி, தூக்கம் வராமல் இருப்பது, நரம்புத் தளர்ச்சி,எப்போதும் அசதி, குடல் வியாதிகள் இதுமாதிரி குறைபாடுகள் செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்களிடம் குறைவாக இருக்குதாம்!

அதனாலே செல்லப்பிராணிகள் வளர்ப்பதிலே ஒன்றும் தவறில்லை. ஆனால் ஒன்று.

அப்பப்ப அதுகளுக்கு வேண்டிய தடுப்பூசியெல்லாம் போட்டுகொண்டு புத்திசாலித்தனமாக வளர்க்க வேண்டும்.


இவ்வளவையும் யோசித்துக் கொண்டிருந்த சமயத்திலே ஒருவர் வந்தார் சார். இடுப்பு வலி கடுமையாக இருக்கு எந்த டாக்டரைப் பார்க்கலாம்?" என்றார். நான் உடனே அவருக்கு யோசனை சொன்னேன்.

"சார்... வீட்டிலே ஏதாவது செல்லப்பிராணிகள் வளர்த்தால் இடுப்பு வலி வராது என்று ஆராய்ச்சி முடிவுகள் சொல்லுது! அதனாலே அட்லீஸ்ட் ஒரு பூனை குட்டியாவது வளர்க்கலாம் தானே!" என்றேன்.

"எங்க வீட்டுப் பூனைக்குட்டியை நான் செல்லமாக துரத்தும் போது மாடிப்படியிலேயிருந்து வழுக்கி விழுந்ததினாலேதான் சார்... இந்த இடுப்பு வலியே வந்திருக்கிறது!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் செயற்றிட்டங்களுக்கு ஐ.நா பொதுச்செயலாளர் பாராட்டு



(நியுயோர்க்)

இலங்கை அரசாங்கத்தின் புதிய முற்போக்கான செயற்றிட்டத்திற்கு தமது முழு ஆதரவையும் தெரிவிப்பதாக, ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்தார்.

இதனை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு, நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்த செயன்முறையின் முன்னேற்றம், இலங்கையை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் புதிய உயரத்திற்கு உயர்த்துவதற்காக அரசாங்கம் தற்போது செயற்படுத்தி வரும் செயற்றிட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி ஐ.நா. பொதுச்செயலாளரிடம் விளக்கினார்.

இலங்கை அரசாங்கத்தின் புதிய முற்போக்கான செயற்றிட்டங்களைப் பாராட்டிய பொதுச்செயலாளர், அதற்காக ஐக்கிய நாடுகள் சபை முன்னிற்பதாகவும், அதற்கு முழு ஆதரவையும் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி, முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய ஆகியோருடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (நி)

# செல்லப்பிராணிகளும் முதியவர்களும்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

மனித வாழ்க்கையில் முதுமை என்பது தவிர்க்க முடியாத கட்டமாகும். வாழ்வின் இக்கட்டத்தில் உடல் வலிமை குறைவதும், சமூக உறவுகள் தளர்வதும், தனிமை அதிகரிப்பதும் இயல்பான ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாக, பல முதியவர்கள் மனஅழுத்தம், மனச்சோர்வு, ஆரோக்கியப் பிரச்சினைகள் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலையில், செல்லப்பிராணிகள் (Pets) – நாய், பூனை, பறவைகள், மீன்கள் போன்றவை- முதியோரின் வாழ்க்கையில் அன்பும் ஆறுதலும் தரும் சிறந்த துணையாக அமைகின்றன.

இன்றைய உலகில், "Animal-assisted therapy" என்ற சிகிச்சை முறை மருத்துவத்துறையிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இது செல்லப் பிராணிகள் மூலமாக மனிதர்களின் உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது. ஆய்வுகள் கூறுவதாவது, செல்லப் பிராணிகளுடன் நேரத்தை கழிக்கும் முதியவர்கள் மற்றவர்களை விட மன அழுத்தமின்றி, உடல்நலத்துடன், சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

**உணர்ச்சி மற்றும் சமூக நன்மைகள்**

முதுமையில் அதிகமாக காணப்படும் சவால் தனிமை, குழந்தைகள் வேலைக்காக வெளிநாடு செல்வது, நண்பர்கள் குறைவது போன்ற காரணங்களால் பல முதியவர்கள் மனச்சோர்வை அனுபவிக்கின்றனர்.

• ஒரு நாய் அல்லது பூனை தினசரி வாழ்வில் உறவினரின் இடத்தைப் போன்ற பாசத்தை வழங்குகிறது.

• "நான் தேவைப்படுகிறேன்" என்ற உணர்வு முதியவர்களின் மன நலத்துக்கு மிக முக்கியம். செல்லப்பிராணிகளை உணவு கொடுப்பது, குளிப்பாட்டுவது, விளையாடுவது போன்ற செயல்கள் மூலமாக அவர்கள் செயற்பாட்டிலும், பொறுப்பிலும் ஈடுபடுகிறார்கள்.

• சமீபத்திய ஆராய்ச்சிகள், செல்லப்பிராணிகளை வைத்திருக்கும் முதியவர்கள் சமூக உறவுகளிலும் அதிகம் ஈடுபடுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. நாயுடன் நடப்ப தன் மூலம் அண்டை வீட்டாருடன் பேசுவதற்கான வாய்ப்புகள் கூடுகின்றன.

**உடல் நன்மைகள்**

உடல் இயக்கம் குறைவது முதுமையின் இயல்பு. ஆனால் செல்லப்பிராணிகள் மூலமாக அந்த நிலைமையை மாற்ற முடியும்.

• நாய் வளர்ப்பவர்கள் தினசரி நடைப்பயிற்சிக்கு செல்வதற்குத் தவிர்க்க முடியாத கட்டாயத்தில் இருப்பதால், அவர்களுக்கு உடற்பயிற்சி அதிகரிக்கிறது.


• இதன் விளைவாக, இதய நோய் அபாயம் குறைகிறது, இரத்த அழுத்தம் சீராகிறது என்று American Heart Association கூறுகிறது.

• நாயை நடைப்பயிற்சிக்கு அழைத்துச்செல்லும் முதியவர்கள், பிறரை விட வாரத்திற்கு சராசரியாக 2.5 மணி நேரம் கூடுதல் நடைப் பயிற்சி செய்கிறார்கள் (Baltimore Longitudinal Study, 2023).

• மேலும், செல்லப் பிராணிகளுடன் விளையாடுவதால் நெகிழ்வுத் தன்மை, உடல் இயக்கத் திறன், எலும்பு வலிமை ஆகியவை மேம்படுகின்றன.

**அறிவாற்றல் (Cognitive) நன்மைகள்**

முதுமையில் அதிகமாகக் காணப்படும் பிரச்சினை நினைவாற்றல் குறைவு மற்றும் மறதி நோய் (Dementia).



• SHARE Study (2025) ஆய்வு காட்டுவது, நாய், பூனை வைத்திருக்கும் முதியவர்களுக்கு நினைவாற்றல் குறைவு மந்தமாக உள்ளது.

• McDonough et al. (2022) ஆய்வில், நாய் வைத்திருக்கும் முதியவர்களின் மூளையின் processing speed, episo dic memory போன்ற அறிவாற்றல் திறன்கள் மேம்பட்டதாகக் கண்டறியப்பட்டது.

• செல்லப்பிராணிகள் உடன் உரையாடுவது, கட்டளைகள் கொடுப்பது போன்றவை மூளையின் செயற்பாட்டைத் தூண்டுகின்றன.

**மனஅழுத்தக் குறைப்பு- உயிரியல் அடிப்படை**

செல்லப்பிராணிகளுடன் தொடர்பு கொள்ளும் போது, உடலில் சில ஓமோன்கள் மாறுபடுகின்றன.

• கோர்டிசோல் (Cortisol) – மனஅழுத்த ஓமோன் – குறைகிறது.

• ஒக்ஸிடோசின் (Oxytocin) – அன்பு மற்றும் நெருக்கம் ஓமோன் – அதிகரிக்கிறது.

• இதனால் முதியவர்களுக்கு மன அமைதி கிடைக்கிறது, பதட்டம், மனச்சோர்வு குறைகிறது.

இந்த காரணத்தால், சில முதியோர் இல்லங்களில் "Animal-assisted therapy" முறைகள் சிகிச்சையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**சவால்கள் மற்றும் தடைகள்**

செல்லப்பிராணிகள் பல நன்மைகளை வழங்கினாலும், சில சவால்களும் உள்ளன:

1. பொருளாதாரச் சுமை – உணவு, சிகிச்சை, தடுப்பூசி செலவுகள்.
2. உடல் நிலை – நடைப்பயிற்சி கொடுக்க முடியாத நிலை, உடல் நலக்குறைவு.
3. ஒவ்வாமை / தொற்று அபாயம்— சிலருக்கு பூனை அல்லது நாய் முடியில் இருந்து ஒவ்வாமை ஏற்படலாம்.
4. பிராணியின் ஆயுள் – செல்லப் பிராணி இறப்பின் போது முதியவர்களின் மனநிலையில் பாதிப்பு அதிகம் ஏற்படலாம்.

**சமூக மற்றும் கொள்கை ரீதியான பரிந்துரைகள்**

• முதியோர் இல்லங்களில் செல்லப்பிராணிகளை வைத்திருப்பதை ஊக்குவிக்க வேண்டும்.

• "Pet therapy programs" என்ற பெயரில் அமைப்புகள் வழியாக நாய்கள், பூனைகளை முறையாகப் பயிற்சி செய்து முதியவர்களுடன் சேர்க்க வேண்டும்.

• மருத்துவர்களும் உளவியலாளர்களும் முதியோரின் மனநல சிகிச்சையில் செல்லப்பிராணிகள் ஒரு துணை சிகிச்சை கருவியாக பயன்படுத்தும் வழிமுறைகளை பரிந்துரைக்கலாம்.

• சமூகத்தில் முதியவர்களுக்கு செல்லப்பிராணி வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு, வழிகாட்டல், உதவி ஆகியவற்றை அரசு, தன்னார்வ அமைப்புகள் வழங்க வேண்டும்.

**முடிவு**

செல்லப்பிராணிகள் முதியவர்களின் வாழ்க்கையில் ஒரு மருந்தில்லா சிகிச்சை போல செயற்படுகின்றன.

• அவர்கள் தனிமையைக் குறைத்து,
• உடற்பயிற்சியை அதிகரித்து,
• இதய நலனை மேம்படுத்தி,
• நினைவாற்றலைப் பாதுகாத்து,
• மனஅழுத்தத்தை குறைத்து,
• சமூக உறவுகளை வலுப்படுத்துகின்றன.

சவால்கள் இருந்தாலும், சரியான பராமரிப்பு மற்றும் சமூக ஆதரவுடன், செல்லப்பிராணிகள் முதியோரின் வாழ்வை மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, அர்த்தமுள்ளதாக மாற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 873





"இல்லை, தாயே! இல்லை! சிம்மாசனம் யாருக்கு என்பது நிச்சயமாகும் வரைக்கும் அருள்மொழிவர்மனைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ளாமலிருப்பதே நல்லது. தங்கள் தந்தையை இன்று முடிவாகக் கேட்டுவிட எண்ணியிருக்கிறேன்.

மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதாயிருந்தால், தங்கள் தம்பியை மறுபடியும் ஈழ நாட்டுக்குத் திருப்பி அனுப்பி விடுவது நல்லது. அருள்மொழிவர்மர் இங்கு இருக்கும்போது மதுராந்தகருக்கு மகுடம் சூட்டச் சோழ நாட்டு மக்கள் ஒருநாளும் உடன்படமாட்டார்கள். சோழ நாடு பெரும் ரணகளமாகும் சோழ நாட்டின் நதிகளில் எல்லாம் இரத்த வெள்ளம் பெருகி ஓடும்"

"ஐயா! அப்படியானால் பூங்குழலியையும், சேந்தன் அமுதனையும் மறுபடி நாகப்பட்டினத்துக்கு அனுப்புவதே நல்லதல்லவா?"

"அதுதான் நல்லது சக்கரவர்த்தி விரும்பினால் ஒரு முறை அருள்மொழிவர்மர் இரகசியமாகத் தஞ்சைக்கு வந்துவிட்டுத் திரும்பிப் போகலாம்!"

"ஆம், ஆம்! மந்தாகினி தேவியும் அருள்மொழியும் உயிரோடிருக்கிறார்கள் என்பதை ஒருமுறை கண்ணால் பார்த்துத் தெரிந்து கொண்டால்தான் சக்கரவர்த்தியின் உள்ளம் அமைதி அடையும்."

"பெரிய இளவரசரைப் பற்றித் தங்கள் தந்தைக்கு எவ்விதக் கவலையும் இல்லை அல்லவா?"

"இல்லவே இல்லை ஆதித்த கரிகாலனுக்கு அபாயம் விளைவிக்கக் கூடியவர்கள் இந்த உலகத்திலேயே இல்லை என்று சக்கரவர்த்தி நம்பியிருக்கிறார். தாங்கள் என்ன நினைக்கிறீர்கள் ஐயா?"

"எனக்கு என்னமோ அவ்வளவு நம்பிக்கை இல்லை. போர்க்களத்தில் பெரிய இளவரசர் அஸகாய சூரர்தான். ஆனால் மற்ற இடங்களில் அவரை ஏமாற்றுவதும் வஞ்சிப்பதும் கஷ்டமல்ல. பழுவேட்டரையர்கள் அவரை விரோதிக்கிறார்கள்.


பழுவூர் இளையராணி அவருக்கு எதிராக ஏதோ பயங்கரமான இரகசியச் சூழ்ச்சி செய்து வருகிறாள். இந்த இரண்டு செய்திகளையும் கரிகாலருக்கு என் சீடன் மூலம் சொல்லி அனுப்பினேன்.

ஆயினும் பலன் இல்லை. தஞ்சாவூருக்கு எவ்வளவு சொல்லியும் வர மறுத்தவர் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குப் போயிருக்கிறார்"

"ஐயா! பழுவூர் இளைய ராணி எங்கள் சகோதரியாயிருக்கக் கூடும் என்று நான் என் தமையனுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறேன். அருகிலிருந்து காப்பாற்றும்படியும் வாணர் குலத்து வீரருக்குச் சொல்லி அனுப்பினேன். ஆகா! வல்லவரையர் மட்டும் இப்போது இங்கே இருந்திருந்தால், நாகப்பட்டினத்துக்கு அனுப்பியிருக்கலாம்"

"அந்தப் பிள்ளை ஏதாவது சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளாமலிருப்பதற்கு நானும் என் சீடனை அனுப்பி இருப்பேன். இப்போது கூடத் தாங்கள் பூங்குழலியை அனுப்பினால் பின்னோடு திருமலையையும் அனுப்ப உத்தேசிக்கிறேன்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காக்கையின் அருமை



மயில்கள் சோகமுடன் நாங்கள் மனிதர்களின் விவசாய நிலத்தில் பயிராகும் கதிர்களை மேய்ந்து விடுவதால் மனிதர்கள் எங்கள் மேல் கோபம் கொண்டு எங்களுக்கு மருந்து வைத்து அழிக்க முற்படுகிறார்கள்.

அது மட்டுமல்ல இந்த மரத்தில் வசிக்கும் எங்கள் அனைவரையும் வலை போட்டு பிடித்துச் செல்ல இன்றோ நாளையோ வருவதாகக் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று வருத்தத்துடன் சொன்னது.

காகங்கள் கவலைப்படாதீர்கள் இந்த மரத்தில் வசிக்கும் உங்களை காக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றன.

இவர்களால் எப்படி எங்களை காப்பாற்ற முடியும் என்று நம்பிக்கை இல்லாமல் மயில்கள் காகங்களை பார்த்தன.

இவைகள் பேசிக் கொண்டிருந்த மறுநாள் நான்கைந்து மனிதர்கள் மரத்தின் அருகில் வந்து நின்று மயில்களை எப்படி பிடிக்கலாம் என பேசிக்கொண்டிருந்த பொழுது திடீரென்று அந்த மரத்திலிருந்து நூற்றுக்கணக்கான காகங்கள் கிளம்பி அந்த மனிதர்களை நோக்கி பறந்து வந்தன.

வந்தவைகள் மனிதனின் தலை மேல் கொத்துவதற்கு பாய்ந்து வர அங்கிருந்த மனிதர்கள் ஐயோ, அம்மா, என்று கூக்குரலிட்டு பயந்து தலைதெறிக்க ஓட ஆரம்பித்து விட்டனர்.

ஒரு சில நாட்கள் கழித்து அந்த மரத்தில் வசித்து வந்த மயில்கள் காகங்களிடம் வந்து உங்களுக்கு மிக வும் நன்றி. நீங்கள் இந்த மரத்தில் வசிப்பதால் எங்களுக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது.

மனிதர்கள் இந்த மரத்திற்கு அருகில் வந்தாலே நீங்கள் கொத்திவிடுவீர்கள் எனப் பயப்படுகிறார்கள். உங்களுக்கு மட்டும் எப்படி இத்தனை நண்பர்கள் என்று ஆச்சர்யத்துடன் கேட்டன.

காகங்கள் சிரித்தவாறு நாங்கள் பிழைப்புக்காக மனிதர்களை நாடினாலும், எங்களுக்கிடையில் எப்பொழுதும் ஒற்றுமையாய் இருப்போம். ஒருவருக்கு ஆபத்து என்றாலும் அனைவரும் உதவிக்கு வந்து விடுவோம் என்று கூறியது. மயில்கள் மிக்க நன்றி கூறி விடை பெற்றன.

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி மட்டும் தான் தருணத்திற்காக காத்திருக்கும்... நாளை அது எவ்வாறு மாறும் என்பதை எவராலும் ஊகிக்க முடியாது.... ~ இந்து தர்மம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு பசு மாட்டை கொடுத்திருந்தால் பாரதப் போர் நடந்திருக்காது

மகாபாரதப் போர் ஆட்சி உரிமைக்கானது என்ற கருத்து நிலையே இருந்து வருகிறது.

ஆனால் உள்ளார்ந்தத்தை நோக்குவோமாயின், துரோணாச்சாரியாருக்கு ஒரு பசு மாட்டை துருபதன் எனும் பாஞ்சாலன் கொடுத்திருப்பானாகில் பாரதப் போர் இடம்பெற்றிருக்காது.

ஆம், துரோணரும் பாஞ்சாலனும் ஒன்றாகப் படித்தவர்கள். பாஞ்சாலன் அரச குலத்தவன். துரோணர் வில்வித்தையைப் பயிற்றுவிக்கும் குரு.

குருகுலக் கல்வி நிறைவுறும்போது துரோணரைப் பார்த்து நண்பா! உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் என்னிடம் வா எனக் கூறுகின்றான் பாஞ்சாலன்.

இந்த நட்புப் பகிர்வோடு இருவரும் பிரிந்து செல்கிறார்கள். காலம் கடந்து போகிறது. துரோணரை வறுமை வாட்டுகிறது.

ஏதுமற்ற நிலையில் தன் நண்பன் பாஞ்சாலன் கூறியது நினைவுக்கு வருகிறது. துரோணாச்சாரியார் பாஞ்சாலனிடம் சென்று தன் கஷ்டத்தைக் கூறுகிறார்.

ஏனோ தெரியவில்லை. மன்னன் பாஞ்சாலன் தான் கூறியதை மறந்து, துரோணருக்கு எதுவும் தர மறுக்கிறான்.

துரோணரோ பாஞ்சாலனிடம் மன்றாடுகிறார். என் பிள்ளை பால் குடிப்பதற்காக ஒரு பசுமாட்டையேனும் தருக எனக் கெஞ்சுகிறார். பாஞ்சாலனோ முற்றாக மறுக்கிறான்.

இந்நேரத்தில் பாஞ்சாலனின் மமதையை அடக்கி அவனைச் சிறைப்பிடிப்பேன் எனத் துரோணர் சபதம் செய்கிறார்.

துரோணரின் பாசறையில் பாண்டவர்களும் கௌரவர்களும் வில்வித்தை பயில்கின்றனர். வில்வித்தைப் பயிற்சியின் ஈற்றில் மாணவர்கள் குருதட்சணை கொடுக்க வேண்டும். அப்போது துரோணர் அருச்சுனனிடம்; பாஞ்சாலனை சிறைப்பிடித்துக் கொண்டு வருவதே நீ எனக்குத் தரும் குருதட்சணை என்கிறார்.

பாஞ்சால தேசம் சென்ற அருச்சுனன் பாஞ்சால மன்னனைச் சிறைப்பிடித்து வந்து துரோணர் முன்னிறுத்த, துரோணர் அவனை ஏளனம் செய்து அனுப்புகிறார். இதனால் மனமுடைந்த பாஞ்சாலன் துரோணரைக் கொல்ல ஒரு மகனையும் அருச்சுனனை மணக்க ஒரு மகளையும் வேண்டித் தவம் செய்கின்றான்.

தவத்தின் பயனாக திருஷ்டத்துய்மன் எனும் மகனும் திரௌபதி எனும் மகளும் பாஞ்சாலனுக்குப் பிள்ளைகளாகக் கிடைக்கின்றனர்.

என்ன செய்வது, திரௌபதி அருச்சுனனை மணக்க வேண்டும். திருஷ்டத்துய்மன் துரோணாச்சாரியைக் கொல்ல வேண்டும் என்பது விதியாயிற்று. அந்த விதி நடந்தாவதற்குப் பாரதப் போர் தேவையாயிற்று என்பதே உண்மை.

ஆக, மன்னாரில் காற்றாலையின் ஆபத்துக் கருதி அதை எதிர்க்கின்றோம் என்றால் அது எமக்கு ஆபத்தில்லை.

**மாறாக, இந்தியாவை எதிர்ப்பதற்காக காற்றாலையை எதிர்ப்பதாக இருந்தால், அது எதிர்காலத்தில் ஈழத் தமிழினத்துக்குப் பேராபத்தாக அமையும் என்ற உண்மையை தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும்.**

## தியாக தீபத்துக்கு சிலை; திலீபனின் பெயரில் வீதி

### வலி.கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதுடன் திலீபனின் தியாகத்திற்கு மதிப்பளிக்கும் முகமாக தவிசாளர் தியாகராஜா நிரோஷால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் தியாக தீபத்தினை நினைவு கூர்ந்து முன்னைய காலங்களில் திலீபன் வீதி எனப் பிரயோகத்தில் காணப்பட்டு பின்னரான சூழ்நிலையில் பொக்கணை வீதியின் பெயரை நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக திலீபன் வீதி என மீளவும் மாற்றியமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் தீர்மானம் எட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தியாக தீபம் திலீபன் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமத்தினைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை வளாகத்தில் தியாக தீபம் திலீபன் அவர்களுக்கு திருவுருவச் சிலையினை 1975 ஆம் ஆண்டின் 4 இலக்க காட்சிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதியைப் பெற்று நிறுவுவதெனவும் சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-7,33)

## கனடா அனுப்புவதாக தெரிவித்து மோசடி

### இரு பெண்கள் உட்பட மூவர் கைது

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் போலி ஆவணங்களைத் தயாரித்து வைத்திருந்ததற்காக ஒரு ஆணும் இரண்டு பெண்களும் நேற்று முன்தினம் (25) பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டு, அவர்களிடம் இருந்து போலி விசா ஸ்டிக்கர்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொரளை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடையவர் என்றும் இரண்டு பெண் சந்தேக நபர்களும் 26 மற்றும் 68 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் கோனகனார மற்றும் பொரளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விசாரணைகளில் ஒரு சந்தேக நபர் மாத்திரம் கனடாவுக்கு அனுப்புவதாக உறுதியளித்து ரூ.3,831,000/= மற்றும் ரூ.3,436,000/= போன்ற பெரியளவிலான பணத்தை மோசடி செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-7)

## வயிற்றுக்குத்துக்கு சிகிச்சை 29 வயதான தாய் மரணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வயிற்றுக் குத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்த இளம் தாயொருவர் மரணடைந்துள்ளார்.

இதில் உடுவில் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான நிறுன் தர்சிகா (வயது-29) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கடந்த 5 ஆம் மாதம் 19 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் வயிற்றுக் குத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்த நிலையில் கழிவுகள் வெளியேற்ற வைத்த குழாயை அகற்ற மீண்டும் சத்திர சிகிச்சை மேற்கொண்டதன் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் இரத்த நாளங்களுக்குள் மேலதிக இரத்த உறைவு ஏற்பட்டு இரத்தப் போக்கால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60,104)

## பெண் நாய்களுக்கு இலவசக் கருத்தடை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு உள்ளூராட்சி அமைச்சின் ஒன்றிணைந்த பங்களிப்புடன் வட மாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களமூடான பெண் நாய்களுக்கு இலவசக் கருத்தடைச் சத்திர சிகிச்சை செயற்றிட்டமானது யாழ்ப்பாண மாநகர சபையால் இன்று சனிக்கிழமை கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பாசையூர் சிகிச்சை நிலையத்தில் காலை 08.30 மணி முதல் மாலை 04.15 மணி வரை முன்னெடுக்கப் படவுள்ளது. (ம-7)

(உரும்பிராய்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் பெண் நாய்களுக்கான இலவசக் கருத்தடை சத்திர சிகிச்சையானது இன்று சனிக்கிழமை உரும்பிராய் உப அலுவலகத்தில் காலை 08.30 மணி முதல் மாலை 03.30 மணிவரை முன்னெடுக்கப்படும் என அலுவலகப் பொறுப்பதிகாரி சி.சைலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இச்செயற்றிட்டத்தில் அயற்கிராமத்தவர்களும் தமது நாய்களுக்கான மேற்படி சிகிச்சையைப் பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ம-7)

## 2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோவினால் பாராளுமன்றத்தில் நேற்று (26) சமர்ப்பிக்கப்பட்டது.

2026 நிதியாண்டுக்கான அரசாங்கச் செலவீனங்களை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு சட்டமூலம் கடந்த செப்ரெம்பர் 18 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டமாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஒதுக்கீட்டு சட்டமூலத்தின்படி 2026 ஆம் ஆண்டில் மொத்த அரசாங்கச் செலவு ரூ.4 ஆயிரத்து 434 பில்லியன் ஆகும்.

வரவிருக்கும் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் நிதி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மிகப்பெரிய தொகை 634 பில்லியன் ரூபாயாகும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு ரூ.618 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் பொது நிர்வாக அமைச்சுக்கு ரூ.596 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

10

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சுய மொழி ஆசிரியர்களைப் பயிற்றுவதற்காக ஓர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை 1889 இலும், ஆங்கில பயிற்சிக் கல்லூரி ஒன்றினை 1903 இலும் அரசாங்கம் தன் பொறுப்பில் நிறுவியது.

**இலங்கை வைத்திய கல்லூரி பற்றி.....**

வங்காள மருத்துவக் கல்லூரி (Bengal Medical College) 1835 இல் கல்கத்தாவில் நிறுவப்பட்டது. 1839 ஆம் ஆண்டில் சிலோனின் பிரிட்டிஷ் ஆளுநரான ஸ்டீவர்ட்-மெக்கன்சி, கல்கத்தாவிற்கு மருத்துவம் படிக்க குறைந்த எண்ணிக்கையிலான இலங்கையர்களை அனுப்பத் தொடங்கினார்.

·1847 ஆம் ஆண்டில் சாமுவேல் ஃபிஸ்க் கிரீன், ஒரு அமெரிக்க மருத்துவ மிஷனரி, வட இலங்கையின் மானிப்பாயில் ஒரு தனியார் மருத்துவப் பள்ளியைத் தொடங்கினார். 1852 ஆம் ஆண்டு ஆளுநர் ஜோர்ஜ் வில்லியம் அண்டர்சனால் இலங்கையில் மருத்துவப் பள்ளி நிறுவப்பட்டது.

1860 களில் இலங்கைத் தீவு யாவ்ஸ் (yaws) நோயால் (பறங்கி வியாதி) பாதிக்கப்பட்டது, இது வன்னியில் பாரிய மக்கள் தொகைக் குறைப்புக்கு வழிவகுத்தது. (பறங்கி வியாதி என்பது தோல், எலும்புகள் மற்றும் மூட்டுகளில் ஏற்படும் வெப்ப மண்டல தொற்று நோய் ஆகும், இது ஒருவகைப் பக்றீரியாவால் ஏற்படுகிறது. பக்றீரியாக்கள் தோலின் வழியாக உள் நுழைகிறது. உள்நுழைந்த பின் புண் தோன்றும். பின்னர் பல புண்கள் தோன்றும்)

1867 ஆம் ஆண்டில் ஆளுநர் சேர். ஹேக்கியூலிஸ் றொபின்சன், வட மாகாணத்திற்கான காலனித்துவ அறுவை சிகிச்சை நிபுணரான ஜேம்ஸ் லூஸை, மக்கள்தொகை குறைப்பு குறித்து விசாரிக்க நியமித்தார்.

லூஸின் பரிந்துரைகளில், நாட்டில் மருத்துவக் கல்விக்கான திட்டம் இருக்க வேண்டும் என்பதும் இருந்தது. கொழும்பு மருத்துவக் கல்லூரி 1870 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் திகதி ஆளுநர் சேர். ஹேக்கியூலிஸ் அவர்களால் திறக்கப்பட்டது.

இந்தக் கல்லூரியானது கொழும்பில் இருந்த அப்போதைய பொது மருத்துவமனையின் பெண் அறுவை சிகிச்சை பிரிவில் (female surgical ward) அமைந்திருந்தது. கல்லூரி அரசாங்கத்தின் முதன்மை சிவில் மருத்துவ அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்தது. கல்லூரியின் படிப்புகள் ஐந்து ஆண்டுகள் நீடித்தன.

அதன் பிறகு மாணவர்கள் தேர்வில் கலந்து கொண்டனர் மற்றும் அவர்கள் தேர்ச்சி பெற்றால் அவர்கள் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை உரிமம் (LMS) டிப்ளோமா (Diploma of Licentiate of Medicine and Surgery) பெற்றனர். இத் தகுதி அவர்களுக்கு மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை செய்ய அனுமதித்தது.

கல்லூரியில் விரிவுரை அறைகள், ஆய்வு கூடங்கள், பிரித்தெடுக்கும் அறைகள் (dissecting rooms) மற்றும் இரண்டு நூலகங்கள் இருந்தன. சிலோன் தொழில்நுட்பக் கல்லூரியில் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் கற்பிக்கப்பட்டது. ஜேம்ஸ் லூஸ் கல்லூரியின் முதலாவது முதல்வர் ஆவார்.

(1946 இல் எல் எம் எஸ் (LMS) பட்டத்தை நிறுத்த முடிவு செய்து, அனைத்து மருத்துவர்களுக்கும் (எம்பிபிஎஸ்-MBBS) வழங்கப்பட்டது.

**தொழில் நுட்பக்கல்லூரி (Technical College) பற்றி.....**

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி 1898 ஆம் ஆண்டு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. முதன்முறையாக இக்கல்லூரி அரச தொழில்நுட்பக் கல்லூரி என்ற பெயரில் 1893 ஆம் ஆண்டில் கொழும்பில் மருதானை என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. 1906 இல் இக்கல்லூரி இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டது.

இக்கல்லூரியில் ஆரம்பத்தில் இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல் போன்ற தூய அறிவியல் கல்வியும், குடிசார் பொறியியல், மின்பொறியியல், எந்திரப் பொறியியல் போன்றவற்றில் தொழில் நுட்பக் கல்வியும் போதிக்கப்பட்டன.

இது இப்போது மருதானை தொழில்நுட்பக் கல்லூரி என அழைக்கப்படுகிறது. 1921 இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்பட்ட போது, தொழில்நுட்பக் கல்லூரியின் அறிவியல் பகுதி பல்கலைக்கழகக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இப்பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இணைசார் கல்லூரியாக இருந்தது. 1933 ஆம் ஆண்டில் இருந்து லண்டன் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறைக்கான வெளிசார் மாணவர்களை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி பயிற்றுவித்தது. 1942 இல் தொழில் நுட்பக் கல்லூரி இலங்கைக் கல்வித் திணைக்களத்தில் இருந்து பிரிக்கப்பட்டு "இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரித் திணைக்களம்" புதிய திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் இக் கல்லூரியில் கணக்குப் பதிவியல், வர்த்தகக் கல்வி போன்றவை பயிற்றுவிக்கப்பட்டன.

1950 இல் பொறியியல் கல்வித் துறை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்துடன் இணைக்கப்பட்டது. 1950களில் காலி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. 1960 களில் மேலும் பல தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. நாடெங்கும் இவ்வாறான கல்லூரிகள் 33 உள்ளன.

**1911 ஆம் ஆண்டுக் கல்வி விசாரணைச் சபை:**

1911 ஆம் ஆண்டு பிறிட்ஜெஸ் (Bridges) என்பவரின் தலைமையில் ஒரு கல்வி விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது. இச்சபை தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலனை செய்தபின் சிபாரிசு செய்ததிருத்தங்களுள் மிக முக்கியமானவை பின்வருவன:

1.· நான்காம் வகுப்புவரை மாணவர்களுக்குத் தாய் மொழி கட்டாயமாகக் கற்பிக்கப்படல் வேண்டும்.

2. ஆங்கிலப் பாடசாலைகள், ஆரம்ப, உயர் தர பாடசாலைகள் என வகுக்கப்படல் வேண்டும். விஞ்ஞானம் அல்லது மனையியல் பகுதிகளைக் கொண்ட உயர்தரப் பாடசாலைகளும் நிறுவப்படல் வேண்டும்.

3. நாட்டின் தேவைகளுக்கேற்ற பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஆங்கிலப் பாடசாலை விடுகைத் தராதரப் பரீட்சை (English School Leaving Standard Test - E.S.T.C.), உள்ளூர்ப் பத்திரப் பரீட்சையாக நடத்தப்படல் வேண்டும்.

4. இலங்கையில் பல்கலைக் கல்லூரி நிறுவப்படல் வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளில் தாய் மொழி கட்டாயமாக்கப்பட்டமை, உள்ளூர்ப் பரீட்சை முறையினை ஏற்படுத்தியமை, விஞ்ஞானம், மனையியல் போதிப்பதற்கு வழிவகை செய்தமை என்பன, விசாரணைச் சபை செய்த சிபார்சுகளினல் விளைந்த நன் மாற்றங்களாகும்.

உள்ளூர்ப் பரீட்சைகள் ஏற்படுத்தப்பட்டதன் பயனாக, நாட்டின் நிலைகளுக்கேற்ப, சிங்களம், தமிழ், பாளி, இலங்கைச் சரித்திரம், இலங்கைப் புவியியல் எனும் பாடங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. மேலும் இச்சபையின் சிபாரிசுகளின் பேரில், 1926 இல் ஆசிரியர் களின் சம்பளம் கூட்டப்பட்டதுமன்றி அவர்களுக்கென ஓர் ஓய்வுச் சம்பளத் திட்டமும் (Pension Scheme) வகுக்கப்பட்டது.

முதலாம் உலகப் போருக்குப் பின்னரும் ஆங்கிலக் கல்வியின் ஈடுபாட்டினால் மேலும் பல ஆங்கிலப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. 1920 இல் 919 அரசாங்க சுய மொழிப் பாடசாலைகள், 1868 உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள், மற்றும் 287 ஆங்கிலப் பாடசாலைகள் நடத்தப்பட்டு வந்தன.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

படவில்லை என்று புத்தசாசன கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி திஸ்ஸ விகாரை பதிவு செய்யப்படவில்லை. வலி.வடக்கு காணிகள் கையகப்படுத்துவதாக பல தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டேன்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணி தொடர்பில் பதிவுச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

இது தொடர்பில் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் இடம்பெற்று வருகின்றன. அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தையிட்டி காணி விடுவிப்புத் தொடர்பிலும் நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்று தெரிவித்தார். (ம-7)

## ஜப்பான்...

80 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தனது விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து நேற்று முன்தினம் 25 ஆம் திகதி இரவு ஜோன் எஃப்.கெனடி சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஜப்பானுக்குப் பயணமானார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி செப்ரெம்பர் 27 முதல் 30ஆம் திகதி வரை ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (ம-7)

## திலீபனின்...

பனின் நினைவேந்தலில் சர்ச்சைக்குரிய துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதால் குழப்பமான சூழ்நிலை ஒன்று உருவாகியிருந்தது.

குறித்த துண்டுப்பிரசுரத்தில் “அரசியல் கட்சிக்கான வேண்டுகோள்” என்ற தலைப்பிடப்பட்ட நிலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அதில் “மக்களுக்கான சேவைகளைச் செய்வதற்காகவே மக்களாலே அரசியல் பிரமுகர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்கள் மக்களுக்கான சேவையினை மட்டுமே முன்னெடுக்க வேண்டும்.

இச்சேவையின் ஊடாக மக்கள் இவர்களை விரும்ப வேண்டும். சிலர் மக்களின் எல்லா விடயங்களுக்குள்ளும் மூக்கை நுழைத்து அதனை அரசியல் ஆக்கப்பார்க்கின்றனர்.

தற்போது இதில் நுழைந்துள்ள அரசியல் கட்சி இதிலிருந்து உடன் வெளியேற வேண்டுமென வேண்டுகின்றோம்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சர்ச்சைக்குரிய துண்டுப்பிரசுரத்தை விநியோகித்தவரை அங்கிருந்தவர்கள் அப்புறப்படுத்தினர். (ம-7)

## இரட்டை...

வைத்தியசாலையில் இரட்டைச் சிசுக்களை பிரசவித்த இளம் தாயும் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நிமலராஜ் சாருமதி (வயது-28) என்ற இளம் தாயே உயிரிழந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி கர்ப்பவதியான தாய்க்கு வலிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை மூலம் இரு சிசுக்கள் பிரசவிக்கப்பட்டபோது ஒரு சிசு இறந்தும் மற்றைய சிசு சில மணி நேரத்திலும் இறந்துள்ளது.

மயக்கமடைந்த நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த தாய் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை (26) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் இறப்பிற்கான காரணம் கண்டறிய உடற்கூற்று பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்விற்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60,104)

## தமிழர்...

கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக நேற்று நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த சிறீதரன் எம்.பி.,

கடந்த கொடிய யுத்தத்தின்போது எமது உறவுகள் ஒருவேளை உணவு கூட இல்லாமல் இருந்த வேளையில் பல தாய்மார்கள், தந்தையர்கள், சிறுவர்கள் கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்தார்கள்.

அன்றைய காலத்தில் முக்கிய பதவியை வகித்த அநுர குமார திஸாநாயக்க, அப்பொழுது நமது சகோதர உறவுகளுக்காக சிந்தாத கண்ணீரை தற்பொழுது காசாவில் இடம்பெறுகின்ற யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நாவில் தனது கவலையைத்தெரிவிக்கின்றார்.

அப்படி இரக்க மனத்தைகொண்டவராக இருந்தால் ஏன் எமது உறவுகள் செத்து மடிந்தபோது தனது அனுதாபங்களையும் எந்தவித ஆதங்கங்களையோ தெரிவிக்கவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.(ம-7)

## யாழில்...

சாவல்கட்டு பகுதியைச் சேர்ந்த சிவரத்தினம் சந்தோஷ் (வயது-17) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு கடற்றொழிலுக்காகச் சித்தப்பாவுடன் காக்கைதீவு கடற்பகுதியூடாக மண்டைதீவு கடலுக்குச் சென்றுள்ளார்.

களங்கண்டி முறையிலான மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குறித்த இளைஞனைக் காணாததால் அவரது சித்தப்பா கடலில் தேடுதலில் ஈடுபட்டவேளை குறித்த இளைஞன் களங்கண்டி தடியைப்பிடித்துக்கொண்டு மயக்க நிலையில் இருந்ததை அவதானித்தார்.

பின்னர் குறித்த இளைஞனை படகில் ஏற்றிக்கொண்டு குருநகர் இறங்குதுறைக்கு வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிறிது நேரத்தில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 5964
S 5 1 5 1 3 4
அத சம்பத S 5 1 3 4
சீட்டிழுப்பு இலக்கம் 539
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 0080
மேடம் 23 30 41 48

தன நிதானய
திகதி - 2025.09.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1994
R 31 34 41 75 R

மெகா பவர்
திகதி 26/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2312
S 07 15 37 59 77

ஜய
திகதி 2025.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 0232
R 7 4 8 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4206
சீட்டிழுப்பு திகதி 26.09.2025
J 08 25 49 66
J

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.26
சீட்டிழுப்பு இலக்கம் 1273
சிம்மம் 05 25 29 60 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.09.2025 வெற்றி வாரம் 0672
S 0 5 7 4 9 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,104,173.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2938
சீட்டிழுப்பு திகதி 2025.09.26 தினம் வெள்ளிக்கிழமை
24 25 27 65 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,722,094.40

சனிதா
திகதி 26.09.2025 வெற்றி வாரம் 5099
45 54 57 60 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,504,837.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு

சசிரி
வெற்றி வாரம் 0778
சீட்டிழுப்பு திகதி 26.09.2025 வெள்ளிக்கிழமை
09 42 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4650
சீட்டிழுப்பு திகதி 26.09.2025 தினம் வெள்ளிக்கிழமை
05 23 31 40 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,801,234.80

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 12 01 25 56 68
சீட்டிழுப்பு வாரம் 2114
26.09.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.596,398,047.60

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2764
சீட்டிழுப்பு திகதி : 2025.09.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,881,284.80
08 45 47 62 M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளை தேவை

01. சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Justice Diploma in arts Phycologist, கனடா Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 44161
02. பருத்தித்துறை - அல்வாய், இந்து, 1996, அவிட்டம், MSc, Norway பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53101
03. பருத்தித்துறை, இந்து, 1994, விசாகம், High School Diploma, Canada Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 54171
04. சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Software Engineer, Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54241
05. அல்வாய் - உடுப்பிட்டி, இந்து, 1993, ரேவதி, Bachelor of Engineering (Auckland), Electrical Engineer, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53766
06. மாதகல், இந்து, 1992, ரோகிணி, Civil Engineer, PHD (USA), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 46435
07. வேலணை, இந்து, 1992, பூரம், ACCA Complete, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 33548
08. திருநெல்வேலி, இந்து, 1997, கார்த்திகை, PHD (Medical - UK) UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. Jaffna Town - இளவாலை, இந்து, 1991, கார்த்திகை, MBBS, FLAB 2, Doctor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 37584
10. புங்குடுதீவு - நுணாவில், இந்து 1991, Personal Support Worker, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 42421

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(5524)

## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதில் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
Sivasakthy Palan (Jeeva)
**077 474 3499**
(1592)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3968)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/- | Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

## உடனடி வேலைவாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இல் இருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3968)

**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com

## மணப்பெண் தேவை

01. யாழ்ப்பாணம், இந்து, 1985, ரேவதி, Computer Engineer, Germany Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 31625
02. வட்டுக்கோட்டை, இந்து, 1983, கேட்டை, Charted Accountant, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 24770
03. கோப்பாய், இந்து, 1984, சதயம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32160
04. திருநெல்வேலி, இந்து, 1990, விசாகம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32016
05. கரவெட்டி, இந்து, 1986, அத்தம், Graduate, Quantity Surveyor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 29720
06. மீசாலை, இந்து, 1988, சதயம், MSC Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 29216
07. கொழும்புத்துறை, Romancatholic, 1993, அத்தம், MSC, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32886
08. ஊர்காவற்துறை, Romancatholic, 1991, Administration Accounting, Working in Royal Bank Of Canada, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 28799
09. கந்தர்மடம், இந்து, 1989, உத்தராடம், MSC, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. கைதடி - வரணி, இந்து, 1994, கார்த்திகை, Hons in Phsycology Goverment Job, Divorce, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51091

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(5524)

## அகரம் உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

### புதிய கல்வி ஆண்டு 2026

புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

### புதிய தரம்-06

தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
(5520)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## ECONOMICS LANKA
வழங்கும்
### G.C.E. A/L Economics
செயலமர்வு II
01.10.2025 முதல் 10.10.2025
Via - ZOOM (8 Pm - 10 Pm)
தொடர்பு : 075 702 0814
இலங்கையிலுள்ள புகழ் பூத்த பொருளியல் ஆசிரியர்கள்
(1589)

## டைனமோ தேவை

புதிய அல்லது பயன்படுத்தக்கூடிய பழைய 5 கிலோ வாற்ஸ் கொள்ளளவு கொண்ட சீனா அல்லது இங்கிலாந்து தயாரிப்பான டைனமோ தேவை. விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி / வாட்ஸ்அப் இலக்கம் :
**077 634 1216**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 200/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= | Max 3Kg |
| 5Kg பிறிமா கோதுமை மா | - 900/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 225/= | Max 1Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 290/= | Max 3Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 185/= | |
| 1Kg அவல் | - 260/= | Max 1Kg |
| 1Kg கடலை | - 350/= | Max 1Kg |
| 1Kg சர்க்கரை | - 240/= | Max 3Kg |
| 1Kg கடலைப்பருப்பு | - 310/= | |
| 100g கற்கண்டு | - 35/= | |
| 100g கச்சான் முத்து | - 110/= | |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 1099/= | |
| 1Kg பயறு | - 790/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 229/= | |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.
(1593)


பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மரண அறிவித்தல்

# சதாசிவம் கைலாசபதி

### (ஓய்வுபெற்ற விஞ்ஞான பாட ஆசிரியர், விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் - வடமராட்சி வலயம்)



தோற்றம் 26.04.1944 — மறைவு 25.09.2025

சதாபொன்ஸ் அல்வாயைப் பிறப்பிடமாகவும் அத்தாயை வதிவிட்மாகவும் கொண்ட சதாசிவம் கைலாசபதி அவர்கள் கடந்த (25.09.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ் சென்றவர்களான சிதம்பரம் - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும் காந்தரூபன் (U.K), அமரர் ஜெயகாந்தன் (உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்), தீபா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மருதங்கேணி பிரதேச செயலகம்), கீதா (ஆசிரியை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசௌந்தரி (அமரர்), கற்பகம் (அமரர்), நடராஜா (U.K), திலகவதி, நமசிவாயம் (அமரர்), சின்னத்தம்பி (அமரர்), சிவகாமசுந்தரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் சிவலோஜினி (U.K) அவர்களின் அன்பு மாமனாரும் சம்யுக்தா, ஹர்சனா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தாய்,
அல்வாய்.

தகவல் :
குடும்பத்தினர்
(C-3967)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.